புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# தோடர் இன மக்களின் பண்பாட்டு ஆட்ட அசைவுக் கூறுகள்

முனைவர்.க.மகாராஜன்
தமிழ் உதவிப்பேராசிரியர்,
அறிவியல் மற்றும் மனிதநேயம் துறை,
R P சாரதி தொழில்நுட்பக் கல்லூரி,
பூசாரிப்பட்டி, ஓமலூர்,
சேலம் மாவட்டம் – 636305

## ஆய்வுச்சுருக்கம்

ஆட்டக்கலை என்பது வாழ்க்கைத் தரங்களின் அடிப்படையில் மனமகிழ்வை வெளிப்படுத்தும் விதமாகவும் வாழ்வியலில் ஒருங்கமைந்தனவாகவும் அமைவது. ஒரு மனிதனின் பொருளாதாரத் தேவைக்காக உருவாக்கப்படும் கலை என்பது வேறு வாழ்க்கையை இரசித்து மகிழ்ச்சியாக வாழவும், சோர்வு தன்னைப் புதுப்பித்துக்கொள்ள ஆடல், பாடல், இசை போன்ற கலையை கொண்டாடுவது என்பது ஒரு வகை. மலையின மக்கள் சமவெளிப் பகுதியில் உள்ள மக்களைக் காட்டிலும் வாழ்க்கைத் தரத்தில் குறைந்து காணப்பட்டாலும் தங்களது வாழ்வியலை மகிழ்வோடு கொண்டு செல்ல விழா நாட்கள் மட்டுமல்லாது எண்ணும் பொழுது பாடி ஆடலை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு ஆடுகின்ற தோடர் இன மக்களின் ஆட்ட அசைவுக் கூறுகள், அரங்க ஆட்ட முறைகள், ஆடுவோரின் பங்கு, பார்வையாளர் பங்கு, உடை ஒப்பனை செய்தல் போன்றவற்றை காணும் வகையில் அமைந்துள்ளது.

## முன்னுரை

தோடர் இன மக்கள் ஆட்டங்கள் ஆடுவதற்கு எனத் தனித்த அரங்கங்கள் ஏதும் அமைப்பதில்லை. ஆனால் அரசு விழாக்களில் பெரும்பாலும் இம்மக்களின் ஆட்டத்தை அமைக்கும் பொருட்டு பரந்த மைதானம் மற்றும் சில இடங்களில் அரங்கமும் அமைத்து ஆட்டத்தை அரங்கேற்றுவதும் உண்டு. இம்மக்கள் பெரும்பான்மையாக தாங்கள் வாழும் இடங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் மலையின் பரந்த மட்டங்களில் குழுவாக ஆடுகின்றனர். இவர்களின் ஆட்ட நிகழ்வுகளைக் காண்பதெனில் கோயில் திருவிழாக்களில் பிற இனமக்களும் கண்டு களிக்கும் பார்வையாளர்களாக விளங்குகின்றனர்.

## ஆட்ட வடிவம்

மலையின மக்களான தோடர்களின் ஆட்ட வடிவம் குறித்து எச்.ஆர்.ரிவர்ஸ், ஜேம்ஸ் வில்கின்சன் பிரின்ஸ், டபுள்யூ, பிரான்சிஸ் எமனோவ் போன்ற ஆய்வு முன்னோடிகள் தங்களின் ஆய்வில் குறிப்பிட்டுள்ளதைத் தொடர்ந்து, நேரில் சென்ற ஆட்ட வடிவம், அதற்கான களம், ஆட்ட முறை பற்றி ஆய்ந்தது குறிப்பிடத்தக்கது. ஆட்ட வடிவங்களுள் ஆட்டக் கலைத்தரத்தைத் தீர்மானிக்க உதவுகின்றன. “அதில் வட்ட வடிவ முறை ஆட்டம், நேர்கோட்டு முறை ஆட்டம் என்றும் இவை இணைந்த நிலையில் விளங்கும் கூத்து வடிவம்”1 என்று மலைவாழ் மக்களின் ஆட்ட வகைகளையும் பிரித்து அறியலாம். தோடர்இன மக்கள் பெரும்பாலும் ஆட்ட வடிவ ஆட்டமுறையையே மேற்கொள்கின்றனர். படுகர்இன மக்கள் வட்டம் மற்றும் நேர்கோட்டு வரிசைமுறை ஆட்டத்தை மேற்கொள்கின்றனர். இவர்கள் ஆடக்கூடிய இருவகையான ஆட்டமும் ஆண், பெண் ஆகிய இருபாலரும் ஆடுகின்றனர்.

தோடர் ஆட்ட அசைவுக் கூறுகள் இருபாலரின் ஆட்ட வகைகள்

தோடர்இன மக்களில் ஆண்களுக்கெனத் தனிவகை ஆட்டமும், இருபாலர் ஆடும் ஆட்டம் என பிரித்தறியலாம்.

பெண்கள் ஆடும் ஆட்டம்

1. கும்மி ஆட்டம்.
2. கைகோத்தாடும் ஆட்டம்.

ஆண்கள் ஆடும் ஆட்டம்

1. கைத்தடி ஆட்டம்.
2. கைகோத்தாடும் ஆட்டம்

கும்மி ஆட்டம்

“பெண்கள் அவர்கள் வாழிடங்களில் அனைத்து விழா நிகழ்வுகளிலும் குழுவாக இணைந்து தம் தோடர்இனம் சார்ந்த பாடலைத் தமிழும் தோடர் மொழியும் கலந்து வரும் பாடலைப் பாடிக்கொண்டு இரவு நேரங்களில் தொடங்கி விடியும் வரையிலும் அடுத்த நாள் விழா நிகழ்வில் சலிக்காது ஆடிக் கொண்டிருப்பர்”.2 கும்மியில் கைக்கொட்டி வலதுக்காலை முன்னே வைத்துக் குனிந்து, இரு கைகளையும் கொட்டிப் பிறகு இடக்காலைப் பக்கவாட்டில் நகர்த்தி, வலதுக் காலைப் பின்னுக்கு இழுத்து நிமிர்ந்தும் கைகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்து கும்மி அடிக்கின்றனர்.

இவர்கள் தம் மொழியில் பாடிக் கொண்டே, கை கொட்டும் முறையில் ஓசையும் சேரும்பொழுதே கும்மி முழுமை பெறுகின்றது. இவர்கள் கும்மிப் பாடலை இரு குழுவாக அமைந்து பாடுகின்றனர். ஒரு குழுவில் முன்பாட்டாளர்களும் மற்றொரு குழு பின்பாட்டாளர்களும் அதாவது ஒரு குழுவர் பாட அதை உள்வாங்கி பின் பாட்டாளர்கள் பாடுகின்றனர். கும்மி ஆட்டப்பாடலின் மெட்டு, சந்த அமைப்பானது ஓர் இயல்பில் அமையாது வெவ்வேறு சந்த அமைப்பில் அமைந்து இவர்களின் இசையமைவு ஆட்டத்திற்கு மெருகேற்றுகின்றது. இதே நிலைபாட்டில் வலக்கால் முன்வைத்தல் குனிதல், இரு கை கொட்டும் முறை, இடதுகால் பக்கவாட்டில் நகர்தல், வலதுகால் பின்னே வருதல், நிமிர்தல், கைகள் இயல்பு நிலைக்கு வருவது என்னும் ஆட்ட அசைவுகளைக் கூறுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வரும்.

கும்மி - கைகொட்டும் முறை

“நாட்டுப்புற மக்கள் ஆடும் கும்மியில் உள்ளங்கைகளை மட்டும் இணைத்து கொட்டுவதும் இடது உள்ளங்கையில் வலக்கையில் நான்கு விரல்கள் மட்டும் பொருந்தக் கொட்டுவதும் இரண்டு கைகளாலும் கும்பிடுமாறு குவியக் கொட்டுவதுமான கை கொட்டுவதல்கள் கும்மி ஆட்டத்தில் காணப்படுகின்றன.”3 தோடரின பெண்கள் கைகொட்டும் முறைகளில் அவரவர் விருப்பம் போலக் கை கொட்டும் முறையைப் பின்பற்றுகின்றனர். கை கொட்டும் பொழுது இடமும் வலமும் மட்டுமின்றி பக்க வாட்டில் கை கொட்டிக் கொள்கின்றனர். இக்கும்மியோடு அப்பெண்கள் இசைக்கும் ஒவ்,ஒவ்,ஒவ் என்ற ஓசை அமைப்பினை முன் பாட்டாளர் ஒரு பகுதியினர் இசைக்கப் பின் பாட்டாளரான மறு பகுதியினர். அதனையே திரும்ப கோர்த்து ஆடும் ஆட்டத்திலும் தொடக்க நிலையில் அமைகின்ற முறை இவ்வாட்டத்தில் காணப்படுகிறது. இவ்வாறு முன் பாட்டாளர், பின் பாட்டாளர் என்ற முறையில் பாடல் பாடப்பட்டு ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடுகின்றனர்.

கை கோத்தாடும் ஆட்டம்

பெண்கள் பலவகையான மெட்டுக்களில் பாடிக்கொண்டு, களைத்துப் போகும் வரை, இடமும் வலமும் நிற்கும், தம் சகபெண்களின் கைகளைப் பிடித்துக் கைக்கோர்த்தபடி ஆடுகின்றனர்.

காலடி வைப்பு முறை

பெண்களின் கைகோத்தாடும் ஆட்டத்தில், கைகளைப் பிடித்த நிலையில் வட்டத்திற்குள் ஓரடி அல்லது இரண்டு அடி சேர்ந்தது போல் காலடி எடுத்து வைத்துத் தலையைக் குனிந்தும், நிமிர்ந்தும் மீண்டும் காலடிகளைப் பின்னோக்கிப் பக்கவாட்டு நிலையில் வலதுபுறம் வட்டம்

*சிதையாமல், வலம் வரும் வகையில் காலடி வைத்தாடுகின்றனர். இக்காலடி வைப்புமுறை பாடலுக்கேற்ற தாளநடைகள் கொண்டு ஆடப்பெறுகிறது. கை கோத்தாடும் ஆட்டத்தில் சில கூறுகள் கும்மியில் காணப்படுவதில்லை மாறுபட்டு அமைகிறது.*

*கைத்தடி ஆட்டம் (ஆண்கள்)*

*ஆயர்குல வாழ்வான மேய்ச்சல் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு விளங்கும் தோடரின மக்களில் "ஆண்கள் மேய்ச்சல் தொழிலுக்கும் பயன்படுத்தும் கைத்தடியைப் புனிதமாகக் கொண்டு அதை ஆட்டக்கலையில் 'கைத்தடி ஆட்டத்திற்குப் பயன்படுத்துகின்றனர்"4 இவ்வின ஆண்கள், வலதுக் கையில் உயர்த்திப் பிடித்த நிலையில், வட்ட வடிவம் மாறாமல், இணைந்து ஆடுவது சிறப்பான ஆட்டமுறையாகக் காணப்படுகிறது.*

*கைத்தடி ஆட்டத்தில் காலடி வைக்கும் முறை*

*வலது கையில் உள்ள கைத்தடியை உயர்த்திப் பிடிக்கும்போது, வலப்புறம் நிற்பவர், தனது இடக் கையால் தனக்கு இடது புறத்தே நிற்பவரின், கைத்தடி பிடித்துக்கொண்டிருக்கும் வலது கையைப் பிடித்துக்கொள்கின்றனர். இந்தமுறை வட்டத்தில் நிற்பவர் அனைவரிடத்தும் அமைகிறது. இவ்வகையான ஆட்டமுறையில் ஆண்களும் பாடல் பாடிக்கொண்டு காலடி வைத்து ஆடுகின்றனர்.*

*"வட்டத்தில் நிற்கக் கூடிய ஆண்கள் ஒரு கையால் உயர்த்திப் பிடித்துள்ள தடியோடும் மறு கையை அருகில் நிற்கக் கூடியவரின் கையோடு பிணைத்து வட்டத்திற்குள் ஒன்று அல்லது இரண்டடி இணைந்தாற் போல், காலடி எடுத்து வைத்துத் தலையைக் குனிந்தும் நிமிர்ந்த நிலையில் மீண்டும் காலடிகளைப் பின்னோக்கிப் பக்கவாட்டில் வலதுபுறம் வட்டம் மற்றும் காலடி சிதறாமல் ஒவ்,ஒவ்,ஒவ் என்ற ஓசை அமைப்பினை இரு பிரிவினராக அதாவது முன்னே ஒரு குழுவினர் பாட இரண்டாம் குழுவினர் பின் பாட்டுப் பாடிக்கொண்டு அடியெடுத்து வைத்து ஆடுகின்றனர்."5*

*கை கோத்தாடுதலில் ஆண்கள்*

*தோடரினப் பெண்களின் கைகோத்தாடும் ஆட்டநிலை போலவே ஆண்களும் கைகோர்த்து ஆடுகின்றனர். இவ்வகை ஆட்டமுறையை ஆண் - பெண் இருபாலரும் இணைந்து வட்டமாக நின்று ஆடி மகிழ்கின்றனர்.*

*இசைக்கருவியின்மையும் ஆட்ட முறையும்*

*தோடரின மக்கள் வேட்டையாடும் சமூகத்தை சாராத சைவர்கள் ஆதலால் விலங்குகளின் தோலைப் பதனிட்டு கருவிகள் உருவாக்கியோ, வாங்கியோ பாடலுக்கேற்ற இசையைப் பயன்படுத்தி ஆடும் வழக்கம் இவர்களிடம் இல்லை. இம்மக்கள் பாடல் அடிகளை உச்சரிக்கும் நிலையிலேயே தாள நடைகள் உணர்த்தப்படுகின்றன. உச்சரிப்பில் தோன்றும் ஆஹ், ஆஹ்,ஆஹ், ஒவ், ஒவ், ஒவ் என்ற ஒலிப்பு முறையின் அழுத்த நிலை, இடைவெளிப் பாட்டு நிலையிலேயே தாளக் கூறுகளை உணர்வதோடு ஆட்ட அசைவுக் கூறுகளின் வழியேயும் தாள நடைக் கூறுகளை இம்மக்களின் ஆட்டமுறையில் காண்பது சிறப்பிற்குரியது.*

*முடிவுரை*

*ஒவ்வொரு மக்களின் வாழ்விலும் கலைகள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். வாழ்நாள் முழுவதும் தனது வாழ்வை சலிப்பில்லாமல் உழைத்து தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு செல்லும் பொருட்டு தனக்கான ஒரு மன அமைதியையும் மகிழ்வையும் ஏற்படுத்த கலைகள் ஒரு ஊன்றுகோலாகச் செயல்படுகிறது.*

*அடிக்குறிப்புகள்*

*1. கே.ஏ.குணசேகரன், ஆட்டம், கூத்து தொடங்கி நாடகம் வரை,நாடகஅரங்கம்.பக- 7*

*2. ஜோகி. வயது – 66, மேல் சீமே அட்டி*

*3. Bloofie ld, Leonard, 1996, Language George Allen and Unwin Ltd, London.*

*4. போஜன், வயது - 75, மாவுக்கல் அட்டி*

*5. ஜோகி, வயது – 66, மேல் சீமே அட்டி*

*துணைநின்ற நூல்கள்*


- *விஜயலட்சுமி த. தோடர் பழங்குடிகளின் வாழ்வியல், திருக்குறள் பதிப்பகம்,சென்னை.*
- *வானமாமலை ந. மக்களும் மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.*
- *சக்திவேல் சு. தமிழ்நாட்டு பழங்குடி மக்கள், மணிவாசகர் பதிப்பகம் சிதம்பரம்*


********* ********* ********** ********* ********* ********** ********** **********